# 17 எழுத்து நடையினை முன்னேற்றுதற்கான பரிந்துரைகள்: I ஒன்றை கண்டுபிடித்தலும் அதை கையாளுதற்குமான ஒருவகை கற்பித்தல் முறை

**இலக்கு**

நடையியல் மற்றும் எழுத்து நடை என்பவற்றின் பல கூறுகள் பல்வகை எழுத்து ஒப்படைகளின் உள்ளார்ந்த பகுதிகளாக அமைகின்றன. பின்வரும் பரிந்துரைகள் மொழியியல் நடையியல் எழுத்துரு வகையான நிலையில் அதாவது, வாக்கிய, முழு எழுத்துரு மாற்றுகளில் வெளிப்படையான பயிற்சி வாய்ப்புகளை வழங்கும், தங்களுடைய முதல் மொழியில் பல்வேறு முகப்புக் கூறுகளையும் பல் வகை எழுதுதலையும் மாணவர்கள் அறிந்துகொள்ள வைப்பதே நோக்கமாகும்.

## 1. எழுத்துருக்களை விரித்தல் அல்லது சுருக்குதல் பற்றி பயிற்சித்தல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
சொற்கள் எழுதப்பட்ட முன்னரே ஆக்கப்பட்ட அட்டைகள் (நீண்ட வாக்கியங்கள் 8 – 10 சொற்கள்). மாணவர்கள் தம் வாக்கியங்களை எழுத வெற்று அட்டைகள் அல்லது தாள் கீற்றுக்கள்.

விரித்தற் பயிற்சி மேலதிகக் கூறுகளைச் (அடைகள், தொடர்கள், (உட்பிரிவுகள்) சேர்ப்பதனால் ஒரு வாக்கியத்தினை மேலும் விரிவடையவைக்கும் நோக்குடையது. எடுத்துக்காட்டாக, "ஒரு பெண் பாடினாள்" → "ஒரு தொழின்முறைப் பாடகியாக வருவதற்கு ரோமில் படித்த அழகாக உடையணிந்த இளம்பெண் அலங்கரிக்கப்பட்ட அரங்கில் அழகான பாடல்களைப் பாடினாள்" எழுத்துருக்களை சுருக்கும்போது எதிர்நிலை இடம்பெறும். அதாவது, வாக்கியங்களை அவற்றின் இன்றியமையாத அடிப்படைக்கு சுருக்குதல். எடுத்துக்காட்டு: "தன் உரிமையாளரை விட்டுத் தப்பி ஓடிய தவிட்டு நிற நாய் பெரிய எலும்பைத் தின்கிறது." → "ஒரு நாய் தின்கிறது".

| தன் | உரிமையாளரை | விட்டுத் | தப்பி | ஓடிய | ஒரு | தவிட்டுநிற |
| நாய் | ஒரு | பெரிய | எலும்பைத் | தின்கிறது |

| ஒரு | தவிட்டுநிற | நாய் | ஒரு | பெரிய | எலும்பைத் | தின்கிறது |

| ஒரு | நாய் | ஒரு | எலும்பைத் | தின்கிறது |

| ஒரு | நாய் | தின்கிறது |

எழுத்துருக்களை விளையாட்டு முறையில் விரிக்கவும் சுருக்கவும் பயிற்சி செய்வதால், வாக்கிய நிலையில் மொழி மற்றும் நடை தொடர்பான ஆய்வுகளுக்குரிய வாய்ப்புகளுக்கான "ஓர் உணர்வினை" மாணவர்கள் உருவாக்குவர்.

மாற்றுகள்:

- ஆசிரியர் முதலில் வகுப்பில் ஒன்று அல்லது பல எடுத்துக்காட்டுகளை விளக்குவார். பின்னர், ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் (அல்லது இணையர்) ஒரு சிறு வாக்கியத்தையும் சில தாள் கீற்றுக்களையும், வாக்கியத்தை விரிவாக்கி, மிக நீண்ட வாக்கியமாக எழுதும்படியான அறிவுறுத்தலுடன் பெற்றுக்கொள்வர். (விரித்தல் ஆய்வு).
- பின்னர் மாணவர்களுக்கு "நாய் குரைக்கிறது" என்னும் ஒரு சிறிய வாக்கியம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அந்த வாக்கியத்துடன் ஓர் உறுப்பினைப் (அடை, தொடர்கள், முதலியன) பின்வருமாறு சேர்க்கவேண்டும்: "பசியுள்ள நாய் குரைக்கின்றது", "பசியுள்ள நாய் நாள் முழுவதும் குரைக்கின்றது", "பசியுள்ள நாய் உணவு இன்மையால் நாள் முழுவதும் குரைக்கின்றது", முதலியன. இது வாய்மொழியாக, பின்னர் எழுத்து வடிவில் பயிற்சி செய்யப்படும்.

- சுருக்கல் பயிற்சிக்கு கதைகள் முதலியனவற்றிலிருந்து வாக்கியங்களைத் தேர்ந்தெடுக்கலாம், இதனூடாக தேவையற்ற எல்லா உறுப்புகளும் தவிர்க்கப்படுகின்றன.
- சிறிய வாக்கியங்களை மட்டுமே உள்ள ஒரு முழுமையான எழுத்துருவை உருவாக்க விரித்தற் பயிற்சியினை பயன்படுத்தலாம். செயற்பாடு: எழுத்துருவின் நீளத்தைக் குறைந்தது மூலத்தின் நீளத்தைவிட இரண்டு மடங்காகப் பெருக்க வேண்டும்.

## 2. வாக்கியங்களை இணைக்கவும் சுருக்கவும் பயிற்சிகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
சிறிய வாக்கியங்களுடன் முன்னேற்பாடாகச் செய்த கையேடுகள்

வாக்கியங்களை இணைக்கும், வேறு வேறாக்கும் பயிற்சிகள் தொடரியல், நடையியல், மொழித்திறமை தொடர்பாக மாணவர்களின் மொழித் தகைமையினை மேலும் கூட்டுகின்றன. விளங்கிக்கொள்ளலையும் வலுப்படுத்தலையும் மேலும் கூட்டுதற்கு இப் பயிற்சிகள் மீண்டும் மீண்டும் நடத்தப்பட வேண்டும். சொற்கூறுகளான "இணைப்பு/சொற்களைப் புணர்த்தல்" அல்லது "துணை உட்பிரிவுகள்" இவ்வேளையில் அறிமுகம் செய்ய வேண்டியதில்லை, ஏனெனில், செய்முறைப் பயன்படுத்தலே இன்றியமையாதது.

மாற்றுகள்:

ஆசிரியர் பல சிறிய இணைவாக்கியங்கள் உள்ள ஒரு தாள் துண்டினைப் பகிர்கிறார். எடுத்துக்காட்டு: "எனக்குப் பசிக்கிறது. ஏதாவது உண்ண விரும்புகிறேன்", "எனக்குக் களைப்பாயுள்ளது. நான் நீண்ட நேரம் உறங்கவில்லை", "அவன் எனக்கு வாக்குறுதியளித்தான். என்னுடன் அவன் திரைப்படத்துக்கு வருவதாக.", "நான் குழம்பிவிட்டேன். உண்மையாக நீங்கள் இதை விளங்கிக்கொண்டீர்களா?", "நீங்கள் விரையவேண்டும். நீங்கள் ஓட்டத்தில் வெல்வீர்கள்.", "பிந்திவிட்டோம். நாம் நம்முடைய ஊர் வீட்டுக்கு வந்தோம்." ஒரு தொடக்க உரையாடலுக்குப் பின்னர், வாக்கியங்களை ஒன்றாக இணைக்கக்கூடிய இணைப்புகளை வகுப்பு திரட்டுகிறது, அவை: மற்றும், பின்னர், உம், ஏனெனில், அப்படியாயின், அது, முன்னர், நேரம், அதனால், பதிலாக, முதலியன. அடுத்து மாணவர்கள் பொருத்தமான இணைப்புகளுடன் வாக்கிய இணைகளை ஒன்றாகச் சேர்த்து எழுதிக்கொள்வர். விரிவாக்கம்: வகுப்பில் தாம் உருவாக்கிய நிரலிலுள்ள இணைப்புகளுடன் (சிவப்பு நிறத்தில் கீழ்க் கோடிடப்பட்டன) மாணவர்கள் தம்முடைய வாக்கியங்களை அமைப்பர். மாற்றாக: தனித்தனி மாணவர்கள் ஒருவருக்கொருவர் இணை வாக்கியங்களை எழுதி அவை பின்னர் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.
வாக்கியங்களைப் பிரித்து வேறாக்கல்: இப்பயிற்சியில், மாணவர்கள் நீண்ட வாக்கியங்களைப் பெறுகின்றனர், அவற்றை இரு தனி வாக்கியங்களாகப் பிரிக்கவேண்டும். எடுத்துக்காட்டு: "ஒரு வாய் கூட என்னால் விழுங்க முடியவில்லை, ஏனெனில் கீரை எனக்குப் பிடிக்காது".

## 3. தாள்கீற்றுகளோடு மேம்படுத்தப்பட்ட பயிற்சிகள்

3 - 6 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் 3 – 4 தாள் கீற்றுகள்

பின்வரும் பயிற்சிச் செயற்பாடுகள் நடையின் வெவ்வேறு கூறுகளை செயல் சார்ந்த விரைவுக் கற்றலுடன் இணைக்கும்.

செயல்முறை:

அ) ஆசிரியர் ஒரு படத்தைக் காட்சிப்படுத்துகிறார். ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் 3 – 4 தாள் கீற்றுகளைப் (A3 தாள் கிடைநிலையில் 4 – 5 கீற்றுகளாக வெட்டப்பட்டது) பெறுவான்/பெறுவாள், படத்தின் ஒரு கூறு பற்றி ஒவ்வொரு கீற்றிலும் ஒரு வாக்கியம் எழுதுவான்/எழுதுவாள்.

ஆ) பின்னர் தாள் கீற்றுகள் ஒருங்குசேர்க்கப்பட்டு முழுமையாக மாற்றி மாற்றிக் கலக்கப்படும். மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிகின்றனர். ஒவ்வொரு குழுவும் 9 – 12 கீற்றுகளைப் பெறுகிறது. இக் கீற்றுகளுடன் படம் பற்றிய ஓர் எழுத்துருவினை அவர்கள் உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது தங்கள் எழுத்து நடை பற்றி அவர்கள் ஆழமாக ஈடுபடவேண்டும்: திரும்பத்திரும்பப் பயன்பட்ட வாக்கியங்களையும் வாக்கியத் தொடக்கங்களையும் சொற்கோவையையும் வெட்டி நீக்கல் அல்லது பதிலிடல். எழுத்துரு வளர்ச்சி மிகுந்த காப்பாகக் கருதப்படவேண்டும். தேவைப்படின், குழு மேலும் வெற்றுத் தாள் கீற்றுகளைப் பெற்று தம்முடைய எழுத்துரு நன்றாக அமைய வாக்கியங்களைச் சேர்ப்பர்.

III